අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/4/59/1/5/1(2015) LIM

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2018.06.

திரு/திருமதி/செல்வி ..............................

..............................................

..............................................

ஆசன இலக்கம் :

Translate Copy

**<u>இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளல் - 2015 (2016) - மட்டுப்படுத்தப்பட்ட நியமனக் கடிதம் வழங்கல்.</u>**

2015.07.28 ஆம் திகதிய மற்றும் 1925/37 இலக்கம் கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய நடாத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தாங்கள் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் III தரத்திற்கு நியமனம் பெறத் தகைமை பெற்றுள்ளதாக மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறேன்.

02. இதற்கமைய நியமனக் கடிதத்தை வழங்கும் வைபவம் 2018.06.20 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கௌரவ சபாநாயகர் கரு ஜயசூரிய அவர்களின் தலைமையில் மற்றும் கௌரவ கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம், கௌரவ கல்வி இராஜாங்க அமைச்சர் வி.எஸ். இராதாகிருஷ்ணன் ஆகியோரின் பங்கேற்புடன் அலரி மாளிகையில் நடைபெறும்.

03. மேலும் இவ் விழாவிற்காக பங்கேற்கும் போது கீழ்க் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு தயவாய் அறியத்தருகிறேன்.

I. ஆண் நியமனதாரர்கள் தேசிய உடை அல்லது ஐரோப்பிய உடை அணிந்து வரவேண்டியதுடன், பெண் நியமனதாரர்கள் இளம் நிறத்திலான ஒசறி அல்லது சாரி அணிந்திருக்க வேண்டும்.

II. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஆசன இலக்கத்திற்கமைய ஆசனங்களில் அமர வேண்டியதுடன், இத்துடன் அனுப்பும் இலக்கத்தை அணிந்திருக்க வேண்டும்.

III. இவ் வைபவத்திற்காக நியமனதாரர்கள் மாத்திரம் பங்கேற்க வேண்டியதுடன், வேறு எவரையும் விழா மண்டபத்திற்கு அழைத்து வர அனுமதி வழங்கப்படமாட்டாது.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister
+94112784832
+94112784825
minister.education@moe.gov.lk

ලේකම් / செயலாளர் / Secretary
+94112784811
+94112785162
secretary.education@moe.gov.lk

IV. இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைப் பிரமாணக் குறிப்பில் 12.2 பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் கீழ் தங்களினால் பூரணப்படுத்த வேண்டிய திசைமுகப்படுத்தும் பயிற்சி நியமனக் கடிதம் வழங்கப்பட்ட தினம் தொடக்கம் ஆரம்பமாகுவதனால் அதற்காக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டவாறு தயாராக வரவேண்டும்.

05. மேற்கூறப்பட்ட 04.IV வாசகத்திற்கமைய திசைமுகப்படுத்தும் பயிற்சி நியமனத்தினம் தொடக்கம் ஆரம்பமாகும் என்பதினால் இக்கடிதத்தின் மற்றும் இணைப்பு 01 இன் கடிதத்தின் பிரதி தங்களது தற்போதைய சேவை இடத்திற்கு அனுப்பப்படுவதினால் தாங்கள் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக் கடமையை 2018.06.20 ஆம் திகதி தொடக்கம் பொறுப்பேற்கக்கூடியவாறு 2018.06.19 ஆம் திகதி தொடக்கம் தற்போதைய சேவை இடத்திலிருந்து வெளியே விலகுவதாக உரிய நிறுவனப் பொறுப்பாளருக்கு அறிவிக்குமாறு தயவாய் மேலும் அறியத்தருகிறேன்.

**ஒப்பம்/ சுனில் ஹெட்டிஆரச்சி**
**செயலாளர்**
கல்வி அமைச்சு

**அனுஷா படவல கமகே**
சிரேஷ்ட உதவிச் செயலாளர்
(கல்வி சேவைத் தாபனம்)